முற்பகல் 11-10

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ள மாவட்டம் அது. அந்த மாவட்டத்தில் விவசாயிகள் அதிகமாக வாழ்கிறார்கள். விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ள காரணத்தால், கால்நடைகளை அதிகமாக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 18-புதுக்குடி கிராமத்திலேயும், அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலேயும், கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எனவே, அங்கே இருக்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்திலே கொள்ளாமல், அந்த எண்ணிக்கைக்கு விதிவிலக்கு அளித்து, - மேலும் தூரத்தை கணக்கிலே சொன்னார்கள் - அந்த தூரத்திற்கும் விதிவிலக்கு அளித்து, இந்தக் கிராமத்திலே கால்நடை கிளை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவசியம் என்று கருதுவார்களானால், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி, எந்த ஊருக்கு அந்தக் கிளை நிலையம் தேவை என்பதையும் அதற்கு இலவசமாக ஒரு ஏக்கர் நிலத்தையும், அதற்கு இடையில், மருத்துவமனை கிளை நிலையம் நடத்துவதற்கு வாடகையில்லாக் கட்டிடம் ஒன்றையும், பங்குத் தொகையையும் செலுத்தினால், நிதிநிலைமைக்கு ஏற்றவாறு அது பரிசீலிக்கப்படும்.

411—

புதுக்கோட்டை தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

* **25198**—திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, சங்கம்விடுதி ஊராட்சி மற்றும் புதுப்பட்டி ஊராட்சி செவந்தாள்பட்டி கிராமப் பகுதிகளுக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு ஆழ்குழாய்க்கிணறுள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், திட்டம் உள்ளது.

1995 ஏப்ரல் 24]

(ஆ) 'புதுவெல் திட்டம்' என்ற பெயரில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சமுதாய ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.1 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளது. 25 முதல் 30 சிறு, குறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு நீர்ப் பாசன சங்கம் அமைக்க வேண்டும். ஆழ்குழாய் கிணறு அமைக்கும் செலவிற்காக, ஒரு விவசாயிக்கு அதிக பட்ச மானியம் ரூ.5000 அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகையை வங்கிகள் கடனாக வழங்கும். வேளாண்மை பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துத் தரப்படும். மின் இணைப்பு பெறுவதற்கான செலவை, நீர்ப்பாசன கூட்டுறவு சங்கமே ஏற்கவேண்டும். சம்பந்தப்பட்ட கிராம விவசாயிகள் இத்திட்டத்தினை பயன்படுத்திக்கொள்ள விரும்பினால், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகலாம்.

415—

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

***37527**—டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரவலான வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் தாத்தையங்கார்பேட்டை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கட்கும் பிள்ளைத்துறை சேரன் செங்குட்டுவன் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கட்கும், ஆக மொத்தம் 5 வீடுகள் 1994-95 ஆம் ஆண்டு நெசவாளர் வீடுகட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க பிரேரணைகள் பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]